ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. ரக்தாக்ஷிவரு மாசிமீ பகுதி உ.

Vol. 2. FEBRUARY–MARCH 1925. No. 2.

[மைசூர் வித்யாபூஷணம் ஸ்ரீ உப. வே. ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்யஸ்வாமி சேலத்துக்கெழுந்தருளிய காலத்து அந்த ஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்ட விஷயங்கள் சேலம் செவ்வாய்ப்பேட்டை வக்கீல் ஸ்ரீமாந் குமாரசாமி செட்டியாரால் எழுதப்படுகின்றன.]

வித்யா பூஷணம் ஸ்ரீ உப. வே. ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்யஸ்வாமி (C. E. M. R. A. S. M. R. S. A.) இந்த ஸ்வாமியின் பெருமையை மேனாட்டிலுள்ளவர்களும் இவர் இயற்றிய ஸம்ப்ரதாய ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களின் வாயிலாக அறிவார்களானால் இந்நாட்டிலுள்ளாரெல்லாம் இவரது பெருமையை அறிவார்களென்பது சொல்லாமலே விளங்கும். இந்த ஸ்வாமி ஜ்ஞானத்தால மிக்கவராயிருப்பது போல வயதினாலும் பெரியவராகவே விளங்குகின்றனர். இந்நிலைமையில் நாங்கள் செய்த நற்றவப்பயத்தினால் எங்களிருப்பிடமாகிய சேலத்திற்கெழுந்தருளினர். எழுந்தருளியதின் நோக்கம், ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தை அபிவிர்த்தி செய்தற்கும், பகவத்கீதையின் தத்வார்த்தங்கள் உபந்யஸிப்பதற்கும், பகவத் விஷய காலக்ஷேபம் செய்வதற்கும், தாழ்ந்தவருணத்தவரை உத்தாரணம் செய்வதற்குமாம்.

20—4—25 முதல் பத்துத்தினங்களாக இந்த ஸ்வாமியால் சேலம் தியேஸாபிகல் சொஸைடி ‘வசந்த மஹாலில்’ பகவத்கீதையில் பொதிந்து விளங்குந் தத்வார்த்தங்கள் மிகவும் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன.

அது நிற்க, பிரதிதினமும் காலை, மாலை, இரண்டு நேரங்களிலும் பகவத் விஷய காலக்ஷேபம் செவ்வாய்ப் பேட்டை 'செல்வக்குடியில்' நடைபெற்று வருகிறது. இடை யிடையே சில தினங்களில் அந்தணுளர் முதல் திருக்குலத்தடியார் இறுதியாக ஸ்வாமியிடம் தீக்ஷை பெற்று இராமாநுஜதாஸர்களானுர்கள்.

இந்த ஸ்வாமி தம் மிக்க அருளினுல் உபந்யாஸ வருஷம் வருஷித்து மாந்தரின் அஜ்ஞாநதாபத்தைப் போக்கியதுபோல வருண பகவானும் மழை வருஷித்து வெப்பத்தின் தாபத்தைக் குறைத்தான். 'வசந்த மஹாலில்' நடைபெற்ற உபந்யாஸங்களின் சாராம்சங்கள் அடியில் வருமாறு:—

முதல் நாளில்:—ஜகத்சிருஷ்டியைப் பற்றியும் வேதம், இதிஹாஸம், புராணம், ஏற்பட்ட முறையைப் பற்றியும், ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்தம், (சாஸ்திரம்) என்ற பிரமாணங்களின் இயல்பைப் பற்றியும் ப்ராக்ருத அப்ராக்ருதஜ்ஞாநங்களை எவ்வெப் பிரமாணங்களாலறியலாமென்பதைப் பற்றியும் விஸ்தரிக்கப்பட்டன.

இரண்டாம் நாளில்:-சப்தப்ரமாணங்களில் (சாஸ்திரப்ரமாணங்களில்) உபப்ருஹ்ம்யம் என்பது மூலப்ரமாணம் என்றும், உபப்ருஹ்மணம் என்பது அந்த மூலப்ரமாணங்களின் அர்த்தங்களைத் தெளிவாகச் சொல்லுகிற நூல் விசேஷமென்றும் பிரஸ்தாபிக்கலாயிற்று.

மூன்றும் நாளில்:—வேதாந்தங்களால் அறியப்படுவன லௌகிக ஜ்ஞானமும் வைதிக ஜ்ஞானமுமாம். இவற்றுள் ஆத்மஜ்ஞாநமே மோக்ஷஸாதநமாயும், மிகச்சிறந்ததாயுமிருக்கும். என்பது இதன் சிறப்புக் கீழ்க்குறிப்பிடும் வரலாற்றாலறியலாம். அதுவருமாறு:—

சனத்குமாரருக்கும் நாரதருக்கும் ஏற்பட்ட சம்பாஷணையில் நாரதர் "தான்" ப்ருஹதாரண்யோப நிஷத்தில் வரிசைக் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கும், வித்தைகளெல்லாங் கற்றுணர்ந்தேன். அதனுல் என்ன பயனடைந்தேன்; ஆத்மவித்தையைக் கற்றுணரவில்லையே ஆதலால் சோகப்படுகிறேன் என்றூர். இது விஷயம் ப்ருஹதாரண்யோப நிஷத்தில் கூறப்பட்டுள்ளது. நிற்க, ஆத்மவித்யையறிய வேண்டியதற்கு ப்ரமாணம், பிரமேயம், பிரமாதா, என்ற மூன்றும்

முக்யங்களாம். சாஸ்திரப்ரமாணத்தால்ப்ரமேயங்களாகிய பரமாத்மா, ஜீவாத்மா, உபாயம், பலம், விரோதி என்ற சகலார்த்த சாரமாகிய இவ்வைந்தின் ஸ்வரூபங்களை உள்ளபடி அறியவேண்டும், என்பது முதலான விஷயங்கள் உபந்யஸிக்கப்பட்டன.

நான்காம் நாளில்:—வேதாதி சாஸ்திரங்களை குருசுச்ரூஷைக்ரமத்தில் (குருபணிவிடை முறையில்) கற்றுணரவேண்டும். இங்ஙனங் கற்றுணர்ந்தால் மாத்திரந்தான் ஜ்ஞானம் உள்ளபடி உண்டாகும். என்று ப்ரமாத்ரு (அறிகின்றவன்) இயல்பை வெளியிட்டதோடு தற்காலம் தேசியபக்தர்களால் பிரசாரஞ் செய்யப்படுகிற 'ஸ்வராஜ்யம்' 'தீண்டாமை' 'பிராஹ்மணத்வேஷம்'முதலியவைஸர்வ ஸம்மதமில்லாத சொற்களாயும், தான்தோன்றியாகக் கூறுமவையாயும் இருக்கின்றமையால் அவை நிலைத்து நில்லாது நசித்துப்போமவையாம். ஆதலால் ஆஸ்திகாபிமானிகளெல்லாம் அவர்கள் கூற்று ப்ரமாண மன்றென்றுணர்ந்து கொள்ளவேண்டும். என்ற விஷயங்கள் விவரிக்கலாயின.

ஐந்தாம் நாளில்:—பரமாத்மா ஜீவாத்மாக்கள், இன்னின்னவென்றவற்றின் தத்வங்களும், அவை இரண்டிற்கு முள்ள ஸம்பந்த விசேஷங்களும் விளக்கமாக வெளியிடலாயின.

ஆறும் நாளில்:—ஜீவாத்மாவைப் பற்றியும், வர்ணாச்ரமதர்மங்களைப்பற்றியும் வெளியிட்டதோடு வர்ணாச்ரம தர்மங்களைப் பிரஸ்தாபிக்கும் முகத்தான் தற்காலம் மாறுதல்களை எடுத்துக்காட்டியும் பிரஸங்கிக்கலாயிற்று.

ஏழாம் நாளில்:—சரீரத்தைக் காட்டிலும். ஜீவாத்மா வேறும் ஜீவாத்மாவுக்கு ஜாக்ரதை, ஸ்வப்நம், ஸுஷுப்தி என்ற மூன்று நிலைமைகள் உள்ளன போல பரமாத்மாவுக்கும் விசுவம், தேஜஸம், ப்ராஜ்ஞும் என்ற மூன்று தெசைகள் உள்ளனவாம். பகவச்சாஸ்திரத்திலே பரமாத்மாவுக்குள்ள இந்த விசுவம், தேஜஸம், ப்ராஜ்ஞும், என்ற தெசைகள் தாம் சங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்த ஸ்வரூபிகளென்று வ்யவஸ்தை செய்யப்பட்டது என்ற விஷயங்கள் வெளியிடலாயின.

எட்டாம் நாளில்:—முந்தின தினங்களில் உபந்யஸிக்கப்பட்ட விஷயங்களை எல்லோருமறியும்படி தொகுத்து விளக்கியதோடு ஸுஷுப்தியாவது:—நான் சுகமாக வுறங்கினேன் என்று குறிப்பிடும் தசா விசேஷமாம்; அஃதாவது நித்திரை செய்கிற காலத்தில் ஆத்மா பரமாத்மாவோடு கலந்து அநுபவிக்கும் நிலை. என்பதும் குறிப்பிடப்பட்டது.

ஒன்பதாம் நாளில்:-கர்மஸம்பந்தமுடைய ஆத்மாக்கள் தேவர்களென்றும், அசுரர்களென்றும் இரண்டுவகைப்படும். அவற்றுள் தேவராவார்:—தெய்வபக்தியும், சாஸ்திரநம்பிக்கையும், நன்னடக்கையும் முதலியவற்றையுடையவர். அசுரராவார்:— தெய்வநிந்தையும், சாஸ்திரவிசுவாசமின்மையும், துர்நடக்கையும் முதலியவற்றையுடையவர். இருவரும் ஒருவருக்கொருவர் விரோதமுடையவர். இவ்வாறு விரோதமுடையவர்களாய்த் தோன்றுதற்குக் காரணம் யாதெனை ஆராய்ந்து பார்த்தால் அசித்தத்வங்கள் தோன்றுதற்குரிய மூலப்ரகிருதிக்கே ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான இவ்விரண்டு வகை சக்திகள் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது விளங்கும். அணு முதல் பிர்மாண்டம்வரை எவ்விடம்பார்த்தாலும் இரண்டு வகையான சக்திகளே தோன்றுகின்றன. இவ்விருசக்திகளாலேதான் ஜகத் வ்யாபாரங்கள் உண்டாகின்றன. ஆக இவற்றுக்குப்ரயோஜனம் ஜகத் வியாபாரங்களை உண்டுபண்ணுவதைத்தவிர பிறிதில்லை. இந்த சக்திகள் அநாதியான பகவத்ஸங்கற்பத்தால் தோன்றுகின்றனவா? இப்படியே இருக்கப்போகின்றனவா? என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தால் ஈசுவர சங்கல்பம், ஆனந்தகுணமடியாக உண்டாகையால் முடிவிலும் ஆநந்த ரூபமாகவே முடியும். இவ்விரண்டிற்கும் இடையிலேமுற்கூறப்பட்ட தேவாசுரபேதங்கள் ஜகத்வ்யாபாரத்துக்காக ஏற்படும். இவையெல்லாம் கீதாசார்யனால் ஒரு அத்தியாயத்தில் பரக்க அருளிச்செய்யப்பட்டன. என்பது முதலான விஷயங்கள் பிரஸ்தாபிக்கலாயின.

பத்தாம் நாளில்:-ஆத்மாவின் இயல்பான குணம் எப்பொழுதும் ஸ்வயம்பிரகாசமுடையதாயிருத்தலாம். இங்ஙனமுள்ள ஆத்மா கர்மத்தால் கட்டுண்டிருக்கிற சம்ஸாரதசையில் அதற்கு அப் பிரகாசம்

மூடப்பட்டிருக்கிறது. தேகஸம்பந்தமற்று முக்தனும்வரை அப்பந்தம் அநுவர்த்திக்கும். முக்தனனவாறே தனக்குள்ள ஸ்வயம்பிரகாசமான குணம் உண்டாகும். மண்ணுடன் சேர்ந்து கண்ணுக்குப் புலப்படாதிருக்கும் ஜலம், கிணற்றை வெட்டி மண்ணை நீக்கியவாறே அது புலப்படுவது, போலவும் மண்ணிற் புதையுண்டிருக்கிற ரத்னம் மண்ணினின்றும் எடுத்தவுடன் அதன்ப்ரகாஸம் தோன்றுவதுபோல வும். ஆத்மாவுக்கு அசித்தாகிய சரீரம் விடுபட்டவுடன் தனக்குள்ள ஸ்வயம்பிரகாசம் தோன்றி அது பரமாத்மா சாம்யத்தை அடையும். இதனுல்முடிந்த பொருள்யாதெனின் அசித்தாகிய தேகத்தைக்காட்டிலும், ஆத்மாவேறுபட்டதத்வம் என்றதாயிற்று. நிற்க, ஒளி, இருட்டு, சுகம், துக்கம், செல்வம், தரித்திரம், நரகு, ஸ்வர்க்கம், விஷம், அமுதம் என்றுசொல்லப்படும். த்வந்துவவகைகள் ஒன்றுக்கொன்று சகாயத்தைச் செய்துகொண்டு முடிவில் பிறதத்வங்களை அதிக்ரமிக்கும். என்ற விஷயங்கள் பலஹேதுக்களால் நிரூபிக்கலாயின.

29—4—25ல் தியாஸாபிகல் சொஸைடி மெம்பர்கள் கேட்டுக்கொண்டதற்காக 'ஸ்ரீராமாநுஜ சரித்திரம், என்பதை வியாஜமாக வைத்துக்கொண்டு, வைஷ்ணவ ஸமயம் அநாதியாயுள்ளது. இதைக் குறித்தே வேதம், இதிஹாஸம், புராணம், ஏகாயனமென்னும் பகவச் சாஸ்திரம், முதலியவை முறையிடுகின்றன. இது விஷயம் யாவருக்கும் புலப்படும்படி, இந்தியாவில் தற்காலம் உள்ள மற்றமதங்களிலும், இதர தேசங்களில் அநுஷ்டித்துவரும் மதாந்த்ரங்களிலும், வழங்கப்பட்டுவருகிற வார்த்தைகளைக்கொண்டு எடுத்து விளக்கியதோடு இந்த சமயமே ஸர்வஸம்மதமான சம்யமாகும்; இதை ரக்ஷித்து எங்கும் பரவச்செய்வதற்காகவே ஸ்ரீ ராமாநுஜர் அவதரித்தார். பின் அவர் பூர்வாசார்யர்களின் ஸம்ப்ரதாயத்தைக் கைக்கொண்டு இந்த வைஷ்ணவ ஸமயப்ரசாரஞ் செய்தார். என்ற விஷயங்களும் ஒருமணி நேரம் அழகாக எடுத்துரைக்கப்பட்டன. அதன் பிறகு ஸ்ரீராமாநுஜரின் சரித்திரத்தின் முக்பாம்சங்களை உரைக்கவந்தவிடத்தில், ராமாநுஜரின் அவதாரம், அவர் யாதவப்ரகாசனிடத்தில் கல்வி பயிலுதல், யாதவப்ரகாசன் ஒரு சுருதிக்கு விரோதப்பொருள் கூறியகாலத்தில் இவர் தம் துக்கக்கண்ணீரை அவன் தொடையில் சிந்தவிடல், திருக்

கோஷ்டியூர் நம்பிகளிடத்தில் ரஹஸ்யார்த்தம் கேட்க எடுத்துக் கொண்ட பிரயாசை, ஆசார்யப்ரதிஜ்ஞையை மீறி தம் அளவுகடந்த கருணையால் ரஹஸ்யார்த்தங்களைக் கோபுரத்தின் மீதிருந்து எல்லோரும் உஜ்ஜீவிக்கும்படி வெளியிடல், இராமாநுஜரும் பிராம்மணரும், இராமாநுஜரும் க்ஷத்திரியரும், இராமாநுஜரும் வைசியரும், இராமாநுஜரும் சூத்திரரும், இராமாநுஜரும் ஊமையும், என்று தலைக்குறிப்பிட்டுக் கொண்டு அவற்றிற்கேற்றவாறே சரித்திரங்களிலிருந்து விஷயங்களை எடுத்து இசைத்துக் காட்டல், மேற் குறிப்பிடப்பட்ட வர்ணதர்மிகளோடு இராமாநுஜர் பரிமாறியமுறை இவை முதலியன விரித்துரைக்கப்பட்டன.

உபந்யாஸ முடிவில் உபந்யாஸகராகிய ஸ்ரீ. உ. வே. ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமி மிகவும் உருக்கத்தோடு இராமாநுஜர் நமக்காகப் பாடுபட்டவை எல்லாம் தீர்க்கமாகக் கவனித்து, நாம் அவர் வழியில் ஒழுகி க்ருதார்த்தர்களாகவேண்டுமென்று திரள் திரளாக வந்திருந்தவர்களின் நெஞ்சிற் பதியும்படி போதித்தார்.

மேற்குறிப்பிட்ட உபந்யாஸங்களுக்கும், காலக்ஷேபத்திற்கும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஈடுபட்டிருக்கும் ப்ரமுகர்களும், வேதாந்த சாஸ்திரங்களில் மிகவும் பழக்கமுடைய சாஸ்திரிகளும், சம்ஸ்கிருத பண்டிதர்களும், வித்வான்களும், தத்வவிசாரணையில் ருசியுள்ள வக்கீல்களும், உத்யோகஸ்தர்களும், வியாபாரிகளும், தற்கால தேசிய ஒழுக்கத்தில் உன்னதபதவியை அடையவிரும்பும் பஞ்சமரென்னும் திருக்குலத்தடியார்களும், பெண்களும், மாணவர்களும், நாடோறும் வந்திருந்து கர்ணாம்ருதமாகக் கேட்டுத்தங்களுடைய ஜ்ஞானக்கண்கள் திறக்கப்பட்டவர்களாய், ஷை ஸ்வாமியின் பரமக்ருபைக்குப் பாத்ர பூதரானார்கள்.

இதுதவிர 2—5—25. 3—5—25. 4—5—25ம் திகதிகளில் பஞ்சமர்களுக்காக நான்கு உபந்யாஸங்கள் செய்தார். மேலும் பகவத் விஷயகாலக்ஷேபம் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தப்ரகாசிகை.

காரப்பங்காடு ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான்
சிங்கராசார்ய ஸ்வாமி எழுதுவது.

(18-ம் பக்கத்தொடர்ச்சி)

இனி அர்ச்சாவதாரம் ப்ரஸ்தாபிக்கப்படும். அர்ச்சையாவது, "அர்ச்சாபூஜா ப்ரதிமயோ:" என்கிறபடி பிரதிமையென்று சொல்லப்படும். பிரதிமையாவது-தான் ஆராதிக்க வேண்டியதற்காகவும், அந்நியர்களுடைய உஜ்ஜீவனத்துக்காகவும் ஸ்வர்ணரஜதாதி திரவ்யங்களைக்கொண்டு தனக்கு அபின்னமாயுள்ள விக்ரஹ ஸஜாதீயங்களாக ஏறியருளப் பண்ணியிருக்கிற விக்ரஹங்களில் ப்ரதிஷ்டா விசேஷங்களாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் ஆசிருதோஜ்ஜீவநார்த்தம் ஸமஸ்த கல்யாண விசிஷ்டனாய்க்கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு.

இந்த விக்ரஹங்கள் ப்ராகிருதத்ரவ்யங்களால் ஏற்பட்டிருந்த போதிலும் "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம்தானே" என்கிறபடியாலும், "நதஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:" என்கிறபடியாலும், "நபூத ஸங்க ஸம்ஸ்தாந:" என்கிறபடியாலும், ஈசுவரனுடைய ஸங்கல்பத்தாலே அப்ராகிருதங்களாகவே யிருக்கும். எப்படி விபவத்தில் விக்ரஹங்கள் ப்ராகிருத ஸஜாதீயங்களாயிருக்கச் செய்தேயும் அப்ராகிருதங்களென்று ப்ரமாணபெலத்தால் ஏற்படுமோ அப்படியே இந்த அர்ச்சாவிக்ரஹங்களும் அப்ராகிருதங்கள் என்று கொள்ளத் தட்டில்லை.

இங்ஙனன்றிக்கே "பிம்பாகிருத் யாத்மநா பிம்பே ஸமர்கத்யாவதிஷ்டதே" என்கிறபடியே அந்த விக்ரஹங்களில் தத்ஸஜாதீயங்களான அப்ராக்ருதவிக்ரஹங்களுடன் பாலும் நீரும் கலந்தாற்போல் எழுந்தருளி யிருக்குமென்பது தேசிகன் திருவுள்ளம். எப்படி யிருந்த போதிலும் இந்த அர்ச்சா விக்ரஹங்களில் ஸர்வஜன ஸாதாரணமாகவே ஸேவை ஸாதிக்கிற கிரமமில்லாமல் சில ஜ்ஞாநாதிகர்களுக்கும் அவர்களுடைய கடாக்ஷத்துக்குவிஷயமாயிருக்கிற சிலர்களுக்கும், இப்பொழுது சேவைஸாதிக்கிற ப்ரகாரத்தைக்காட்டிலும் விலக்ஷண ஸௌந்தர்யனாய்க்கொண்டு ப்ரத்யக்ஷவிஷயமாகிறான். இந்த விஷயத்தை மணவாளமாமுனிகள் "சிலர்க்கு அழகாலே

பிறக்கும்'' என்கிற ஸ்ரீ வசன பூஷண ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் அர்ச்சையில் காதாசித்கமாக விக்ரஹஸாக்ஷாத்காரமுடையவர்களென்று அருளிச்செய்திருக்கிறார். இதில் அர்சையில் என்னும் காதாசித்கமென்னும் இருப்பதால் விலக்ஷண ஸௌந்தர்யாவிஷ்காரம் உண்டென்றே கொள்ள வேணும். இந்த விஷயம் பிள்ளையுறங்காவில்லி தாஸருடைய வ்ருத்தாந்தத்தில் காணலாம். அதாவது பிள்ளை உறங்காவில்லி தாஸர் பூர்வாவஸ்தையில் தன்னுடைய பார்யை வெய்யிலில் வருகிறபோது அவளுக்குத் தாம் நடைபாவாடை விரித்துக்கொண்டுவாராநிற்க எம்பெருமானார் கண்டருளி இப்படிச் செய்வதேன் என்று கேட்க இவளுடைய கண்ணழகுக்கு வெய்யிலின் தாபத்தால் வாட்டம் வருமென்று செய்தேன் என்று சொல்ல, அப்படியானால் இது தன்னிலும் விலக்ஷணமான கண்ணழகைப் பார்ப்பீர் வாரும் என்று அவரை அழைத்துக்கொண்டு போய்ப் பெரிய பெருமாளுடைய திருக்கண்ணழகை ஸேவிக்கப் பண்ணுவிக்க, அதுமுதல் அவர் விஷயாந்தர வைராக்யமுள்ளவராய் பகவத் விஷயத்தில் விசேஷமான பரிவுடையவராயிருந்துகொண்டு எப்பொழுதும் பெருமாளுடைய திருமேனிரக்ஷகராகவே யெழுந்தருளியிருந்தார் என்று ஐதிஹ்ய மேற்பட்டிருக்கிறது.

ஆகையால் இப்போது ஸேவைஸாதிக்கிற ப்ரகாரமில்லாமல் விலக்ஷண ஸாக்ஷாத்காரம் உண்டென்று ஏற்படுகிறது. இப்படியே தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீஸூக்தியில், 'போதரேன் என்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகன்' என்பதாலும் இந்தவிஷயம் ஸ்பஷ்டம். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலும், ஆழ்வான் வரதராஜ ஸ்தவத்திலும் மற்றுள்ள ஸூக்திகளிலும் பெருமாளுடைய விக்ரஹ ஸௌந்தர்யவர்ணனம் செய்திருப்பதற்கு நிபந்தனம் விலக்ஷண ஸௌந்தர்ய ஸாக்ஷாத்காரமே தவிர வேறில்லை. அதிசயோக்தியென்று சொல்லுமது பகவத் விஷயத்தில் அநுபபந்நம்.

இந்த அர்ச்சாவதாரங்கள் ஸ்வயம்வ்யக்தமென்றும், ஆர்ஷமென்றும், தைவமென்றும், ஸைத்தமென்றும், மாநுஷமென்றும், பல ப்ரகாரபேதங்களை உடைத்தாயிருக்கும். இது, பரார்த்தம்.

இங்ஙனன்றிக்கே தங்கள் தங்கள் க்ருஹங்களிலும் ஸ்வார்த்தமாக ப்ரதிஷ்டிதங்களாயிருக்கும்.

இப்படியான அர்ச்சாவதாரங்கள் கீழே நிரூபித்த பரவ்யூஹாதிகள் போலன்றிக்கே ஆச்ரயணத்துக்கு அத்யந்தோபயுக்தமான ஸௌலப்ய பூர்த்தியிருப்பதால் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இவற்றைப் போரவிரும்பியிருப்பார்கள். பாஞ்சராத்ரத்திலும் "ஜ்யாயாந்:சைவோத்தரோத்தர:" என்று மேலானதாகச் சொல்லப்பட்டது. இப்படி இந்த அர்ச்சாவதார வைபவம் பல ப்ரமாணங்களாலும் ஸித்திக்கும். ஸ்ரீராமாயணத்தில் இக்ஷ்வாகுகுலராஜாக்களுக்கு ஆராதநீயமான மூர்த்திவிசேஷம் அர்ச்சாவதாரம் என்றறியலாம்படி "ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத் அலங்கார விதிம் க்ருத்ஸ்நம்காரயா மாஸவேச்மநி:" என்றும் "ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோ: சிஷ்யே நரவராத்மஜ:" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாகவதத்திலும் பலராமனுடைய தீர்த்தயாத்திரையில், "ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம்" என்றும், ஏகாதச ஸ்கந்தத்தில் அர்ச்சாவிக்ரஹ ப்ரதிஷ்டை முதலானதும் வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறது. இன்னும் ப்ரமாணோபந்யாஸங்கள் பண்ணுகை விஸ்தாரபயத்தால் நிறுத்திவிட்டேன். இப்படி ஈசுவரதத்வம் நிரூபிக்கப்பட்டது.

இனி ஹிதம் என்று சொல்லப்படும் உபாயஸ்வரூபம் நிரூபிக்கப்படும்.

உபாயமாவது தான் அடைய வேண்டிய நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்துக்கு ஸாதனமாக அநுஷ்டிக்கப்படுமவையான கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம், ப்ரபத்தி, தேசவாஸம், திருநாமஸங்கீர்த்தனம், அவதார ரஹஸ்யஜ்ஞானம் முதலானவைகள்.

இவை மோக்ஷத்துக்கு ஸாதநமாகையாவது மோக்ஷப்ரதனான ஈசுவரனுக்கு இவனுடைய அபராதத்தாலுண்டான நிக்ரஹத்தை மாற்றி ப்ரஸன்னனாம்படி செய்து பலப்ரதானத்துக்கு உபயுக்தமான ஸங்கல்பத்தை உண்டாக்குகை.

இப்படியாக ஈசுவரப்ரஸாதத்துக்கு ஹேது வாகையாலே இவ்வுபாயங்கள் காரணமென்று வ்யவஹரிக்கப்படும். கீழ் நிரூபித்தபடி

ஈசுவரனே காரணமாகிறபடியால் இவைகளைக் காரணமென்பது ஔபசாரிகமாகையால் வ்யாஜோபாயங்களாம்.

வ்யர்ஜமர்கையாவது அங்யார்த்தமாக அநுஷ்டிக்கப்படுமது ப்ரஸங்காத் உத்தேச்ய விஷயத்துக்கு உபகாரமாயிருக்குமிருப்பு. இங்கு "மாதா பிதாப்ராதா" என்கிற ப்ரமாணத்தின்படி ஸர்வ விஷய பந்துவாயிருக்கிற ஸர்வேசுவரன் விஷயத்தில் ஸ்வதஸ்ஸித்தமாய் ஸ்வயம்ப்ரயோஜனமாய்ச் செய்ய்ப்படுமிவை நிக்ரஹ நிவ்ருத்திக்குப்ரயோஜகமாகின்றன. அதாவது "நெற்செய்யப்புல் தேயுமாப்போலே', தன்னடையே கழியச்செய்வது.

இப்படியிருக்க வஸ்துஸ்திதியை அறியாமல் உபாய புத்யா அநுஷ்டித்தாலும் கார்யகரமாகத் தட்டில்லை; அப்படிச் செய்கிறவன் ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதனல்லன். இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் சுருதப்ரகாசிகை லகுஸித்தாந்தத்தில் "ப்ரியதமேவஹி வரணீயோ பவதி" என்கிற இடத்தில், "ஸ்வய முபஸ்திதஸ்ய ஸ்வீகார ஏவ" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் மேல் விசதமாய் நிரூபிக்கப்படும்;

இப்படியிருந்துள்ள கர்மயோகாதிகள் ஸ்வயம்ப்ரயோஜனப்ரீதி ஸாதனங்களான கைங்கர்யங்கள். இவைகளை பலஸாதநமாக புத்தி பண்ணாமல் பலமாகவே நினைக்கவேணும். அப்படியன்றிக்கே ஸாதன புத்தி பண்ணுவது பார்யையானவள் பத்ருசுச்ரூஷைக்குப் பலத்தை யபேக்ஷித்தாற் போலேயும், புத்ரன் பித்ருசுச்ரூஷைக்குப் பலத்தை அபேக்ஷித்தாற் போலேயும் இருக்குமாகையால் ஈசுவரனுக்கும் தனக்கும் உண்டான நிருபாதிக ஸம்பந்தத்துக்குக் கொத்தையர்யித்தனை.

இனி கர்மயோகம் நிரூபிக்கப்படும். கர்மயோகமாவது:- நித்யங்களாயும், நைமித்திகங்களாயும் உள்ளகர்மங்களை பலத்தை அபேக்ஷியாமல் கேவல பகவதாராதனமாக அநுஷ்டிக்கை;

இனிஜ்ஞான யோகமாவது இப்படியிருந்துள்ள கர்மயோகாநுஷ்டாநத்தாலே ரஜஸ்தமஸ்ஸுக்கள் நிவ்ருத்தங்களாய் ஸத்வம் தலை

யெடுத்து நிர்மலமான அந்த:கரணத்தை உடையவனுக்கு ஆத்மாவலோகன ஸாதனமாக ஏற்படுகிற ஜ்ஞானவிசேஷம். இப்படியிருந்துள்ள கர்மயோக ஜ்ஞானயோகங்கள் பக்திக்கு அங்கங்களாகவே நிரூபிக்கப்படுகின்றன. கீதையில், இவை ஸ்வதந்த்ரோபாயங்களாகச் சொல்லப்பட்டுள்ளன, ஸ்ரீபாஷ்யத்தில் கர்மயோகஜ்ஞானயோகங்களுக்கு ஸ்வாதந்திரிய நிஷேதம் சொல்லவில்லை. ஆதலால் இரண்டு பக்ஷங்களும் உபபந்நங்கள்.

இனி, பக்தியாவது, கர்மயோக ஜ்ஞானயோகங்களை அங்கங்களாகவுடையதாய், "அநுவித்ய விஜாநாதி விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" என்கிற ப்ரமாணத்தின்படி அத்யயநத்தாற் போந்தஸம்ஸ்க்ருத வேதார்த்த ஜ்ஞானமடியாக வருகிற தைலதாராவத விச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்ததி ரூபமாய் தர்சநஸமாநாகாரமாய் ப்ரீதிரூபமாயிருப்பதொரு ஜ்ஞானவிசேஷம்.

இந்தபக்தி ஸ்ம்ருதிசந்ததிரூபமாயிருந்தாலும், பர்வநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாகப் பரிணமிக்கிறது. பக்திக்கு விஷயமான பகவத்ஸ்வரூபரூபகுணங்கள் நிரதிசயாநுகூலங்களாயிருப்பதால், ப்ரீதிரூபாபந்நமாகும்.

இப்படியிருந்துள்ள பக்தியில் த்ரைவர்ணிகர்களுக்கே அதிகாரமுண்டு. அப்படியன்றிக்கே ஆசார்யருடைய அநுக்ரஹ விசேஷத்தாலே, நாரதருடைய உபதேசத்தால் த்ருவனுக்குக் கிடைத்தாற்போலே வருகிற பக்தி ஸர்வாதிகாரையாம். இந்த பக்திக்கு அவரவர் வர்ணங்களுக்கு உசிதங்களான தர்மங்கள் அங்கங்கள். இந்த விஷயம் கீதாபாஷ்யதாத்பர்ய சந்திரிகையிலும், "ஸ்த்ரியோவைச்யா ஸ்ததா சூத்ரா" என்கிற சுலோக வ்யாக்யான முடிவிலும், தத்வமுக்தாகலாபத்தில் "பும்பிஸ் ஸித்தாதி காரை:" என்கிற சுலோகத்திலும் தேசிகரால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. உபநிஷத்பாஷ்யத்தில் நாரதருக்கு பூர்வம் சூத்ர ஜந்மாவிலே ருஷிகள் அநுக்கிரஹத்தாலே பக்தியோகம் ஏற்பட்டிருப்பதால் பக்தி ஸர்வாதிகாரையென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனமன்றிக்கே ஸர்வேசுவரனுடைய நிர்ஹேதுககடாக்ஷ விசேஷத்தாலே "மயர்வறமதி நலமருளினன்" என்கிறபடியே ஆழ்வார்களுக்குக் கிடைத்திருக்கிற பக்தியுமொன்றுண்டு.

ப்ரபந்நர்களுக்கு, "பகவத் பக்திமபிப்ரயச்ச மேஸ்தாநத்ர யோசித பரபக்தியுக்தம்மாம் குருஷ்வ" என்கிற படியே உண்ணுகைக்குப் பசிபோலே அநுபவ உபகரணமாய் வருகிறபக்தியும் ஒன்றுண்டு. இந்த பக்திக்கு பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்திகளாகிற அவஸ்தாபேதங்கள் உண்டாகும்.

இவற்றுள் பரபக்தியாவது தெரிசன ஸமானாகாரமான ஜ்ஞான விசேஷம். பரஜ்ஞானமாவது, இதிலும்விசதமான ஸங்கமாவஸ்தாபந்நமான ஜ்ஞான விசேஷம். பரமபக்தியாவது இப்படி மானஸாநுபவம் செல்லாமலிருக்கச்செய்தே பாஹ்யஸம்ஸ்லேஷத்தில் அபேக்ஷை பிறந்து அது பெறுவிடில் தரிக்கவரிதான அவஸ்தா விசேஷம்.

இப்படியான பக்தி நம்மாழ்வாருக்குத் திருவிருத்தம் முதல் "திருமாலிருஞ்சோலைமலை" என்கிற திருவாய்மொழியளவும் பரஜ்ஞான கெர்ப்ப பரபக்தியாயிருக்கும். "சூழ்விசும்பணிமுகிலில்" பரஜ்ஞான தெசாபன்னமாயிருக்கும். "முனியே நான் முகனில்" பரம பக்தி தெசையை அடைந்திருக்கும்.

உபாஸகர்களுக்கு சரமசரீராவஸானத்தில் இப்படியான தெசைகள் பிறக்கும். ப்ரபந்நர்களுக்கும் அப்படியே. இப்படியன்றிக்கே "பக்தயா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்த்தனம்" என்கிறபடியே யதாவஸ்திதமான சாஸ்த்ர ஜ்ஞானத்துக்கு ஸாதனமான விசுவாஸாதிரூபான பக்தியுமுண்டு. இந்த விஷயம், "மந்த்ரேதத் தேவதாயாஞ்ச ததாமந்த்ர ப்ரதே குரௌ த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸாஹி ப்ரதம ஸாதநம்" என்கிற சுலோகத்திலும் கண்டுகொள்க. "ஜ்ஞாதும் த்ருஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" என்கிற கீதாசுலோகத்திலும் ஸ்பஷ்டம்.

இந்த பக்தி "உத்தர பூர்வாகயோ ரச்லேஷ விநாசௌ" என்கிற ஸூத்ரத்தின்படி உபாஸனத்துக்கு முன்பு பலோன்முகமாக்கும்

லிருந்துள்ள பூர்வாகங்களையும், ப்ராமாதிகங்களாய் வருகிற உத்தராகங்களையும் நிவிர்த்திப்பிக்கும். அப்படியல்லாமல் புத்திபூர்வகமாக உத்தராகங்கள் நேர்ந்தால் அதுப்ராய: சித்தவிநாச்யமாகும்; அதுவும் பக்தியாலாம். பலோன்முகமான ப்ராரப்த கர்மாவின் அவஸானத்தில் மோக்ஷத்தைப் பண்ணிக்கொடுக்கும்.

மோக்ஷ தெசையில் இந்த பக்தியே போஜனத்துக்கு க்ஷுத்துப்போலே பரபக்தி, பரஜ்ஞான பரமபக்திகளாகிற அவஸ்தைகளை யுடையதாய்க் கொண்டு அநுபவோபகரணமாயும், பலரூபையாயுமிருக்கும்.

இங்ஙனமன்றிக்கே அவதார ரஹஸ்ய ஜ்ஞானத்தை அங்கமாகவுடைய பக்தி யோகம் "த்யக்த்வா தேஹம் புநர் ஜன்மா நைதி மாமேதி ஸோர்ஜுந" என்கிற கீதையின்படி ப்ராரப்தஸரீராவஸாநத்தில் ப்ரபத்தியைப்போல் பலத்தைக்கொடுக்கும். இந்த பக்தி ஸர்வபாபங்களுக்கும் நிவர்த்தகையாயிருந்த போதிலும் ப்ரஹ்மவிதபசாரம் நேர்ந்தால் பலப்ரதாநோபயுக்தமாகமாட்டாது. இந்த விஷயமும் ஸ்ரீபாஷ்யாதிகளில் ஸ்பஷ்டம்.

இந்த பக்திக்கு விஷயமாயிருக்கிற பகவத்ஸ்வரூப ரூபகுண விபூதிகள் நிரதிசயாநுகூலங்களாக விருக்கிறபடியால் இதுவும் ப்ரீதிரூபையாகவும், பலரூபையாகவுமிருக்கும். இந்த விஷயத்தை "ஸ்மர்ய மாணத்யர்த் தப்ரியத்வேந ஸ்வய மப்யத்யர்த்த ப்ரிய:" என்று ஸ்ரீபாஷ்யத்தில் அநுக்ருஹிக்கப்பட்டது.

ஸ்ரீபாஷ்யத்தில் பலாத்யாயத்தில் பக்தியை நிரூபித்திருக்கிறதும் இதைப்பற்றிபதாம். இந்த விஷயம் சுருதப்ரகாசிகையில் வ்யக்தம். ஆதலால், "சேமுஷீ பக்தி ரூபா" என்று பிரார்த்திக்கப்பட்டது. விஷ்ணு புராணத்திலும்,யாப்ரீதி ரவிவேகாநாம்விஷயேஷ் வநபாயிநீ, த்வா மநுஸ்மர தாஸாமே ஹ்ருதயாந் மாபஸர்ப்பது, என்று ப்ரஹ்லாதரால் ப்ரார்த்திக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஆழ்வார்களும் பலவிடங்களில் ப்ரார்த்தித்திருக்கிறார்கள். இத்தைஸாதனமாக்குவது பசிக்குண்ணும் பாலையே மருந்தாக்குவது போலுமிருப்பதொன்று. அந்த ஸாதனத்வமும் ஸ்வயம்ப்ரயோஜன ப்ரீதிஸாதநத்வரூபம். அதவா, ஜாநாதி, இச்சதி, யததே என்கிற கிரமத்தில் பகவததிசயாதாயக கிருதி ஸந்ததி ரூபமான பலத்தில் இச்சாபரபர்யாய ரூபமான அபிநிவேசமாய்க் கொண்டு திருஷ்ட விதயாஸாதனமாயிருக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ தத்வ திவாகரம்.

[ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை மந்தமதிகளும் தெரிந்து உஜ்ஜீவிக்கும்படி எளிய தமிழ் நடையில் எழுதும்படி ப்ரார்த்தித்துக் கொண்டதற்காக ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமாந் திருமாலிருஞ்சோலை ஜீயர்ஸ்வாமியால் இது எழுதப்படுகிறது.]

இது, சுகுணபூஷணன் என்ற ஒரு ஸத்குருவிற்கும், சுமதி என்ற ஒரு ஸச்சிஷ்யனுக்கு முண்டான வைஷ்ணவ விஷயமான வினாவிடை ரூபமாயிருக்கும். இவ்விஷயம், இதற்கு முன் பலபெரியோர்களாலும், பல நூல்களாலும் வெளியிடப்பட்டிருப்பினும் அது யாவருக்கும் அறிய அரிதாயிருப்பதால் யாவரும் சுலபமாயறியும்படி எழுதுவது நலமெனக் கருதி இந்தக் கார்யத்தில் முயற்சிக்கிறேன். இதில் ஏதேனும் குற்றமிருப்பினும் பெரியோர்கள் பொறுத்தருள்வார்களாக.

இது இதர சமயங்களை இழித்துரைப்பதற்கும், ஸ்வமதத்தை உயர்த்திக்கூறுவதற்கும் உண்டானதில்லை. இந்த சமயத்தின் உண்மையை மாத்திரம் தெரிவிக்க வந்ததாகும். இப்படியே எல்லாச் சமயத்திலும் அந்தந்தச் சமய உண்மையை அந்தந்தச் சமயச் சார்பாயிருக்கிற மந்தமதிகள் எளிதில் உணரும்படி விஷயத்தை வெளியிடுவது அவரவரின் கடமையாகும், நிற்க, ஒரு பதிவ்ரதையானவள் தன் பர்த்தாவையே ஸர்வவித உத்தமனாக நினைத்து அவனை வணங்கித் தியானித்து வேறு புருஷனைக் கண்ணுறாமலிருப்பது அவளுக்கு எவ்வாறு தருமமாமோ அதுபோல அந்தந்தச் சமயத்தினர் தம் சமயத்தையும், சமயகுருவையும், தெய்வத்தையும் பெருமைப் படுத்திக் கொண்டாடுவதும் அந்நிய சமயத்தைப் பொருட்படுத்தாதிருப்பதும் மத குரு தெய்வ பக்தியாகும்.

(சுகுண பூஷணனென்னும் ஸத்குருவை சுமதியென்னும் சச்சிஷ்யன் தண்டனிட்டுக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு வினவுகிறான்)

சும— ஆதிபகவனென்பவன்யாவன்?

சுகு— அகாரப் பொருளாகிய விஷ்ணு.

சும— அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன?

சுகு— வேதமுதலான சாஸ்திரங்களில் விஷ்ணுவையே காரணப் பொருளாகக் கூறியிருப்பதேயாகும்.

சும— உலகென்பது யாது?

சுகு— கண்ணுக்குத் தோற்றப்படுவதாயும், த்வந்துவத்துக்குக் காரணமாயும், முக்குணங்கட்கு விளை நிலமாயும், ப்ருதிவி, (மண்) அப்பு, (நீர்) தேயு, (அக்நி) வாயு, ஆகாசம் என்ற இவற்றை ஒருங்கு சேர்த்துக் கடவுளால் அமைக்கப் பெற்றதாயுமிருக்கின்ற வடிவுடைப் பொருள்கள்.

சும— த்வந்துவம் என்பது யாது?

சுகு— சுகம் துக்கம், மானம் அவமானம், லாபம் நஷ்டம், சத்ரு மித்ரு, என்ற இவை போல்வனபலவாம்.

சும— முக்குணங்கள் எவை?

சுகு— ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம்என்பவைகளாம்

சும— அந்த குணங்களின் இயல்பு என்ன?

சுகு— குணங்களின் தாரதம்மியம் ஸத்குருவின் கிருபையாகிய ஸூரியோதயத்தால் ஸச்சிஷ்யனாயிருப்பானொருவனுக்கு பிரகாசிக்கக்கூடியதாகும்.

சும— யானும் ஒரு ஸச்சிஷ்யனல்லனோ?

சுகு— நீ எவ்வாறு ஸச்சிஷ்யனாவாய்

சும— ஸச்சிஷ்ய லக்ஷணந்தான் எப்படி?

சுகு— நல்ல புத்தி யுடையவனும் ஸாதுஸங்க முடையவனும், உண்மைப்பொருளை அறிந்து கொள்ள விருப்பமுடைய வனும், குருவினடிவாரத்தில் வாஸஞ் செய்துகொண்டு குருவின் விருப்பத்திற்குரிய பணிவிடை செய்தற்குரிய வனும், அப்பணிவிடை செய்யும் விஷயத்தில் லஜ்ஜை முதலியவை இல்லாதவனும், எப்பொழுதும் குருவி னிடத்தில் பக்தியுடையவனும், குருவின் அகமகிழ்ச்சி யை எதிர்பார்க்கக் கூடியவனும், இந்திரிய நிக்ரஹ முடையவனும், பொறுமையுடையவனும், பொறாமை யில்லாதவனும், குருவைத்தவிர வேறு தஞ்சமில்லை யென்று நினைப்பவனும், சாஸ்திரங்களில் நம்பிக்கை யுடையவனும், குருவினால் எவ்வகையாலும் பரீக்ஷிக்கப் பட்டவனும், (நெஞ்சினால் நினைப்பதொன்று, வாயினாற் சொல்வதொன்று, உடலினாற் செய்வதொன்றில்லாமல், மூன்று கரணத்தாலும் ஒரு வகைப்பட்டவனென குருவி னால் ஆராயப்பட்டவனும்,) செய் நன்றி அறிபவனும் இருக்கின்றவனே ஸச்சிஷ்யனாவான். இத்தன்மையுடைய வனுக்கே குருவின் கிருபையால் அஜ்ஞானம் நீங்கும்.
(சுமதி திடுக்கிட்டு ஸத்குருவினடி பணிந்து விண்ணப் பிக்கிறான்.)

சும— தேவரீர் அருளிச்செய்தபடி லக்ஷணமுடைய ஸச்சிஷ்யன் உலகிற் காணுதல் அரிதன்றோ! அது நிற்க என் போன்ற நித்ய ஸம்சாரிகள் நற்கதி யடையும் பொருட்டு வகுள பூஷணபாஸ்கரோதயம் என்னும் நம்மாழ்வார் அவதரித்து என்போன்றபெத்தசம்சாரிகளின் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கவில்லையா? இராமாநுஜ திவாகரமென்னும் உடைய வர் அவதரித்து ஸர்வேசுவரன் திரிவிக்ரமஸ்வரூபியா யிருந்து தாரதம்யம் பாராமல் எல்லார் சிரஸிலும் தம்பாதத் தை வைத்தது போல ஸர்வரஹஸ்யமான அர்த்தங்களை

ஸர்வஸ்வதானம் (தனக்கெனச் சிறிதும் மறைத்து வைத்துக் கொள்ளாமல் எல்லாப் பொருளையும் கொடுத்தல்) செய்யவில்லையா? தற்பொழுது ஹரிஸமய திவாகரம் உதித்துவிளங்கவும் மந்த மதியாகிய யான் அஜ்ஞாநாந்தகாரத்தில் மூழ்கி முசித்துக் கிடப்பது என்னே? இதுவுமொரு ஸத்குருவின் அருளோ?

(சுமதி மயங்கிக் கிடக்கிறான்)

சுகு— குருசிஷ்ய உபதேசங்களைத் தெரிவிக்கின்ற கீதை முதலிய நூல்களில் குரு, அரிய வழிகளை உபதேசிக்க அதைக் கேட்டு சிஷ்யன் மயங்கிய காலத்தில் குரு தேறுதல் கூறினனென்று சொல்லப்பட்டுளது. அதுபோல் உன்னுடைய மயக்கத்தைப் போக்குவது எமது கடமையாகும். நீ இனி மயங்கவேண்டா முன் குறிப்பிடப்பட்ட சிஷ்ய லக்ஷணங்களில் முக்ய லக்ஷணம் ஒன்றிருந்தாலும் அந்த சிஷ்யன் நற்கதியடைவான். அந்த முக்ய லக்ஷணமாவது—ஸத்குரு நிஷ்டையாம். அஃதாவது—ஸத்குரு விஷயத்திலுண்டான உபாய புத்தி (ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் குருபக்தியே காரணமென்ற நிச்சயபுத்தி) இதைத்தான் அந்திமோபாயநிஷ்டை என்று பெரியோர்கள் அருளிச்செய்வார்கள். நீ இஃதொன்றைக்கைப்பற்று வையானல் உனக்கு ஸத்குரு கடாக்ஷம் ஏற்படும்.

சும— இந்த ஸத்குரு நிஷ்டையை மாத்திரம் பெருமைப்படுத்திக் கூறுதற்குக் காரணம் என்ன?

சுகு— இது நாமாகச் சொல்வதில்லை. எவ்வகைப்பட்ட விசேஷார்த்தங்களும் நம்பூர்வாசார்யர்களால் அருளிச் செய்யப்பட்டுள்ளன. அவைகளை நாம் நம்பவேண்டும். நம்பிக்கையே எல்லாவற்றிற்கும் முக்ய காரணமாகும்.

சுகு— நம் பரமாசார்யர்களாகிய அருளாளப்பெருமாளெம்பெருமானரும், மணவாளமாமுனிகளும் அருளிச்செய்த "ஞானசாரம்" "உபதேசரத்தினமாலை" என்ற நூல்களில்

காணலாம்.

சும— அவற்றிற் கூறியவற்றை விவரித்தருள்க?

சுகு— (1) "அல்லிமலர்ப்பாவைக்கன்பரடிக்கன்பர்
சொல்லுமவிடுசுருதியாம்—நல்ல
படியாம்மனு நூற்கவர்சரிதைபார்வை
செடியார்வினைத்தொகைக்குத்தீ"

(2) "முன்னோர்மொழிந்தமுறைதப்பாமற்கேட்டுப்
பின்னோர்ந்துதாமதனைப்பேசாதே-தன்னெஞ்சில்
தோற்றியதேசொல்லியிதுசுத்தவுபதேசவர
லாற்றதென்பர்மூர்க்கராவார்"

என்ற இவை முதலியவற்றால் அறியலாம்.

சும— இவற்றின் பொருளென்ன?

சுகு— (1) பெரிய பிராட்டியார் விஷயத்தில் அன்புடைய ஸர்வேசுவரன் திருவடிகளில் பக்தியுடைய பெரியோர்கள் விநோதமாகச் சொல்லும் வார்த்தையும் வேதம் போல யாவராலும்கொள்ளத்தக்கதாம். அவருடைய சரித்திரமானது, தர்மசாஸ்திரங்களிற் சிறந்த மனு தர்மசாஸ்திரத்திற்குமூலப்ரமாணமாம். அவர்களின் கடாக்ஷமானது, தூறுமண்டிக்கிடக்கின்ற பாபக் கூட்டத்திற்குத் தீயாம் என்றவாறு.

(2) பூர்வாசார்யர்களால்அருளிச்செய்யப்பட்டஅர்த்த விசேஷங்களைக் கேட்க வேண்டிய முறை தவறாமல் கேட்டுச் சிந்தித்துப் பின் பிறருக்கு உபதேசிக்குமிடத்தில்தாமதைச்சொல்லாமல்தம் நெஞ்சில் தோற்றியவற்றைச் சொல்லி இதுவே பரிசுத்தமான உபதேச மார்க்கத்தையுடையது என்று சொல்லுகிறவர்கள் ஜ்ஞானமில்லாதவராவார் என்றவாறு.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயலும் வ்யாக்யானங்களும்

ஆழ்வார்களேற்றமருளிச்செயலேற்றம்
தாழ்வாதுமின்றியவைதாம்வளர்த்தோர்—ஏழ்பாரும்
உய்யவவர்செய்தவியாக்கியைகளுள்ளதெல்லாம்
வையமறியப்பகர்வோம்வாய்ந்து.

அருளிச்செயல்களாவன:— மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் உலகத்தவரின் துர்க்கதிகண்டு தம்மருளால் சொல்லப்பட்ட திராவிடவேதங்களாகிய திவ்யப்ரபந்தங்களாம். இவை, "கேட்டாராரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்" என்றபடி இனிமையுடையனவாயும், ஸர்வேசுவரனுடைய பெருமையைப் பேசுவனவாயும், அறியத்தக்க எல்லா அர்த்தங்களும் தம்மிடத்திற் கொண்டுள்ளனவாயும், ஈசுவரனுடைய பிரியத்தை விளைவிப்பனவாயும், ஸம்சாரபந்தத்தைப்போக்குவனவாயும், விரைவில் பலத்தைக் கொடுப்பனவாயும் இருப்பனவாம். இவற்றின் பெருமைகூறவந்தவிடத்தில் ஈட்டில் "பகவத்ஸ்வரூபரூப குணவிபூதிகளை விசத விசதர விசததமமாக அநுபவித்து அது உள்ளடங்காமையாலே வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்பிரபந்தங்கள்" என்று நம்பிள்ளையும், ஆசார்யஹ்ருதயத்தில் "அல்பச்ருதர்கலக்கினசுருதிநன்ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது. மேகம்பருகின சமுத்ராம்புபோலே நூற்கடல்சொல் இவர்வாயனவாய்த்திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே" "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்குவிடுவர்" என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் "தெரியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று வேதாந்த தேசிகரும்,

"சொல்லென்கெனோமுழுவேதச்சுருக்கென்கெனோவெவர்க்கும்
நெல்லென்கெனோவுண்ணுநீரென்கெனோமறைநேர்நிறுக்கும்
கல்லென்கெனோமுதிர்ஞானக்கனியென்கெனோபுகல
வல்லென்கெனோகுருகூரெம்பிரான்சொன்னமாலையையே"

என்று கம்பரும் அருளிச் செய்தார்கள். இதனால் அருளிச்செயலின் பெருமை சொல்லப்பட்டது. இனி அதன் விவரம் உரைக்கப்படும்.

பொய்கையார்பூதத்தார்பேயார்புகழ்மழிசை
ஐயனருள்மாறன்சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர்தாள்தூளிநற்பாணன்நற்கலியன்
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு

என்று குறிப்பிடப்பட்ட ஆழ்வார்பதின்மருள், பொய்கை பூதம்,பேயார் என்ற இம்மூவரும் எல்லா ஆழ்வார்களுக்கும் முன்பே அவதரிக்கையால் இவர்கள் முதலாழ்வார்களென்று வழங்கப்படுவார் கள். இவர்களால் அருளிச்செய்யப்பட்ட ப்ரபந்தங்கள் முதற்றிருவந் தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாந் திருவந்தாதி என்பனவாம். இவற்றிற்கும் இயற்பா என்று வழங்குவதுண்டு. இவை வடமொழிச் சொல் விரவப்பெறாதனவாம். நிற்க, இவை 'இன்கவி' என்றும், 'செந் தமிழ்'என்றும், 'அருந்தமிழ்' என்றும்'நற்றமிழ்'என்றும் நம்மாழ்வா ராலும், திருமங்கையாழ்வாராலும், முதலியாண்டானாலும், மண வாள மாமுனிகளாலும் பாராட்டப்பட்டனவாம். அவை வருமாறு:-

இன்கவிபாடும்பரமகவிகளாற்
றன்கவிதான்றன்னைப்பாடுவியாதின்று
நன்குவந்தென்னுடனாக்கியென்னாற்றன்னை
வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே

என்று நம்மாழ்வார் இனிமையான கவிகளைப்பாடுகின்ற மேலான கவிஞர்களான முதலாழ்வார்களைக்கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளாதே என்னைச் சாதனமாகக்கொண்டு கவிபாடுவதே இஃ தென்ன குணமென்கிறார். திருமங்கையாழ்வாரும் "செந்தமிழ் பாடுவார்தாம் வணங்குந் தேவர்" என்றார்.

முதலியாண்டானும்,

"கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான்கவிஞர்போரேறு—வையத்
தடியவர்கள்வாழவருந்தமிழ்நூற்றந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து" என்றார்.

மணவாளமாமுனிகளும்,

"மற்றுள்ளவாழ்வார்களுக்குமுன்னேவந்துதித்து
நற்றமிழால்நூல்செய்துநாட்டையுய்த்த" என்றார்.

இதனால்முதலாழ்வார்ப்ரபந்தங்கள், ஆழ்வார்களாலும் பாராட்டும்படி மிகவும் பெருமை வாய்க்கப் பெற்றனவாம் என்பது வெளியாயிற்று.

முதற்றிருவந்தாதியைப்பற்றிய சிலகுறிப்புக்கள்.

இப்பிரபந்தம், நூறுபாடல்களைக் கொண்டுளது. இதில், திருவரங்கம், திருவேங்கடம், திருவெஃகா, திருவிண்ணகர், திருக்கோவலூர், என்ற ஐந்து அர்ச்சாவதார திவ்யதேசங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவற்றுள் திருவேங்கடத்தைப்பற்றி 26,37,38,39,40, 68, 76, 77-ம் பாடல்களால் சிறப்பித்து அருளப் பெற்றிருப்பது காணலாம். இது நிற்க, இதில் மாபலிபால் நீரேற்றவரலாறு, கடல் கடைந்த வரலாறு.பாரதயுத்தத்தில் திருவாழியால் சூரியனை மறைத்த வரலாறு, ஸர்வேசுவரன் ஊழிக்காலத்தில் தன் வயிற்றில் எல்லாவற்றையும் மார்க்கண்டேயனுக்குக் காட்டிய வரலாறு, அகஸ்தியர் முதலானோர்க்கு உபதேசித்த வரலாறு, வராகாவதாரம், திரிவிக்ரமாவதாரம், நரசிம்மாவதாரம் முதலிய பல வரலாறு காணலாம். இவற்றுள் கிருஷ்ணாவதாரத்தைப்பற்றிப் பாராட்டிப் பேசுமிடம் பலவுண்டு. இங்ஙனம் பலவிஷயங்கள் குறிப்பிடப்பட்ட இப்பிரபந்தத்தில் இன்றியமையாச்சில விஷயங்கள் இங்கு எடுத்துரைக்கப்படும்.

இப்பிரபந்தம் அருளிச்செய்த பொய்கையாழ்வார்தமக்கு நாட்டாரோடு கூடிவாழுமிருப்புப்பொருந்தாமையால், இவர் ஓடித்திரியும் யோகியராயிருந்தார். இவ்வாறிருக்கிறகாலத்தில் ஒரு நாள் மழையும் காற்றையுங்கண்டு திருக்கோவலூரில் ஒரு இடைகழியிற் சென்று

கண்துயின்று கொண்டிருந்தார். அவ்விடத்திற்குப் பூதத்தாழ்வார் வந்து இங்குஇடமுண்டோவென்று வினவ இதுகேட்ட அவர் இருவர் இருக்கலாம் வாருமென்றழைக்க இவருஞ் சென்று அவருடன் கூடியிருந்தார். அதன் பிறகு பேயாழ்வார் அங்குச்சென்று இங்கு இடமுண்டோ என்று வினவ உள்ளிருப்பவர்கள் மூவர் நிற்கலாம் வாருமென்று அழைக்க இவருஞ் சென்று அவர்களுடன் கூடி நின்றார். இந்த நிலைமையில் ஸர்வேசுவரன் இவர் களிடத்திலுள்ள பிரியத்தினால் இவர்களை நெருக்க அப்பொழுது இவர்கள் ஜ்ஞானச் சுடர் விளக்கேற்றி ஆராய்ந்து ஸர்வேசுவரனைக் கண்டார்களென்பது வரலாறு. இது விஷயத்தைக் குறித்து இவர்

1 நீயுந்திருமகளும்நின்றாயால்குன்றெடுத்துப்
பாயும்பனிமறைத்தபண்பாளா—வாசல்
கடைகழியாவுட்புகாகாமர்பூங்கோவல்
இடைகழியேபற்றியினி

என்று அருளிச்செய்தார். ஸர்வேசுவரன் பிரம்மாவினுடைய மடியில் ஒரு சிறு குழந்தை வடிவாயிருந்து கொண்டு "இவனுக்கு வரங் கொடுக்கவேண்டா இது அநர்த்தமாம்" என்று இராவணனுடைய தலையைத் தன் திருவடிகளால் எண்ணினானென்று குறிப்பிடப்பட்டுளது. இது, இராமாயணமுதலிய இதிஹாஸங்களிற் கேட்டறியாததொன்றாம். அது வருமாறு:—

ஆமேயமரர்க்கறியவதுநிற்க
நாமேயறிகிற்போம்நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன்தாள்பணிந்தவாளரக்கன்நீண்முடியைப்
பாதமத்தாலெண்ணினான்பண்பு

என்பதாம். இது விஷயம் மூன்றாந்திருவந்தாதியிலும், நான்முகன்திருவந்தாதியிலும் குறிக்கப்பெற்றுளது. அதுவும் இங்கு அறியத்தக்கதாம்.

---

1 (இ—ள்) கோவர்த்தனம் என்ற மலையை எடுத்து மழையைக்காத்த சுலபமான குணமுடையவனே! வீட்டிற்கு வெளிப்புறத்திற் போகாமலும் உள்ளே புகாமலும் மிக்க அழகினையுடைய திருக்கோவலூரின் மத்திபிடத்தைப்பற்றிக்கொண்டு நீயும் பெரியபிராட்டியுமாக நின்றாய் இது என்ன வியப்பு என்றவாறு.

2 ஆய்ந்தவருமறையோன்நான்முகத்தோன்நன்குறங்கில்
வாய்ந்தகுழவியாய்வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போதுமூன்றேழென்றெண்ணினானூர்ந்த
அடிப்போதுநங்கட்கரண்

என்று மூன்றாம் திருவந்தாதியிலும்

3 கொண்டுகுடங்கால்மேல்வைத்தகுழவியாய்
தண்டவரக்கன்தலைதாளால்—பண்டெண்ணிப்
போங்குமரன்நிற்கும்பொழில்வேங்கடமலைக்கே
போங்குமரருள்ளீர்புரிந்து

என்று நான்முகன் திருவந்தாதியிலும் விளக்கப்பட்டன. ஸர்வேசுவரன் உலகளந்த விஷயத்தைப்பற்றிப் பேசவந்தவிடத்தில் திருமங்கையாழ்வார்.

"ஒருகுறளாயிருநிலம்மூவடிமண்வேண்டி
யுலகனைத்துமீரடியாலொடுக்கியொன்றும்
தருகவெனுமாவலியைச்சிறையில்வைத்த
தாடாளன்தாளணைவீர்........" என்றும்

ஒண்மிதியில்புனலுருவியொருகால்நிற்ப
ஒருகாலும்காமருசீரவுணனுள்ளத்து
எண்மதியுங்கடந்துஅண்டமீதுபோகி
யிருவிசும்பினூடுபோயெழுந்துமேலைத்
தண்மதியுங்கதிரவனுந்தவிரவோடித்
தாரகையின்புறந்தடவியப்பால்மிக்கு
மண்முழுதுமகப்படுத்துநின்றவெந்தை
மலர்புரையுந்திருவடியேவணங்கினேனே" என்றும்

---

2 (இ—ள்) ஸர்வேசுவரனால் ஓதுவிக்கப்பட்ட பெறுதற்கரிய வேதங்களையுடைய சதுர்முகப்பிர்ம்மாவின் அழகிய மடியில் அழகியசிறுகுழந்தையாய்க்கொண்டு வாளாயுதத்தையுடைய இராவணன் தலைகளைப் பத்தென்றெண்ணின ஸர்வேசுவரனுடைய கல்யாணகுணபூர்ணமான திருவடித்தாமரையே நமக்கு ரக்ஷகம் என்றவாறு.

3 (இ—ள்) பிர்ம்மாவினால்) எடுத்துக்கொண்டு மடியில் வைத்துக்கொள்ளப்பட்ட சிறுபிள்ளையாய், தண்டனைக்குரியனான இராவணனுடைய தலைகளை முன்பு திருவடிகளினாலெண்ணி அந்தர்த்தானமாகிய, எப்பொழுதும் யௌவன பருவமுடைய ஸர்வேசுவரன் எழுந்தருளியிருக்கிற திருமலையை யௌவன முடையவர்களே! ஆச்ரயித்துப் போருங்கள் என்றவாறு.

அருளிச்செய்தார். இங்குஒரு திருவடியானது பூமியையும், மற்ருெரு திருவடியானது ஆகாசத்தையும் அளந்தன என்று சொல்லப்பட்டது. இது போலவே பலவிடங்களிலுங் காணலாம். இத்திருவந்தாதியில் இதுவிஷயத்தைக் குறிப்பிடவந்தபொழுது.

அடியும்படிகடப்பத்தோள்திசைமேற்செல்ல
முடியும்விசும்பளந்ததென்பர்—வடியுகிரால்
ஈர்ந்தானிரணியனதாகம்இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான்உலகளந்தநான்று

உலகளந்த காலத்தில் திருவடி பூமியை அளவிட தோள்திசையைக்கடந்து செல்லத் திருமுடி ஆகாசத்தை அளவிட்டது என்று சொல்லப்பெற்றுளது.

நகரமருள்புரிந்துநான்முகற்குப்பூமேல்
பகரமறைபயந்தபண்பன்—பெயரினையே
புந்தியால்சிந்தியாதோதியுருவெண்ணும்
அந்தியாலாம்பயனங்கென் •

இப்பாடல், நான்முகனுக்குச் சத்யலோகப்ராப்தியையும், வேதத்தையும் உபதேசஞ்செய்த ஸர்வேசுவரனைத் தியானஞ்செய்யாமல் காயத்திரி மந்தரத்தை ஜபித்து உருவெண்ணியதால் யாதொரு பயனுமில்லையென்று ஜபமாத்திரத்தால் காரியஸித்தியுண்டென்றிருப்பார் கண்டிக்கப்படுகிருர்கள்.

(தொடரும்.)

ஸ்ரீ:

இராமாயணத் திருப்புகழ்.

தற்சிறப்புப்பாயிரம்.

1. பணிமேலே படுத்தவனைத் தனுவேதா னெடுத்தவனைப்
பகைசேர்தா டகைக்குமுதற் கணையேவிப்
பதையாதே துணித்தவனைத் திருவோடே [1]திளைத்தவனைப்
பரதாழ்வா னிருக்கவனத் திடையேபோய்க்
கணையாலே குரக்கரசைப் பொருசீரா மனைக்கடலைக்
கடவா[2]நீ டரக்கர்குலக் கிளைமாளக்
களமீதே யறுத்தவனைப் பரிவோடே துதிக்கமுழுக்
கலைஞானே தயத்தெளிவைத் தரமேனும்
துணைவாகா சினிப்புலவர்க் கரசே[3]சீ தளப்பொருநைத்
துறையாளா வெதிர்ச்சமயக் குலகாலா
தொழுவார்தீ வினைச்[4]சிகரிக் கிடியேறே மணக்குமகிழ்த்
தொடைமார்பா [5]தடுத்திடுமுட் பகைபாவுந்
தணிவோனே யருட்கடலுட் டிளைவோனே சகத்துணர்வைத்
தருவோனே செழித்தமறைப் பொருள்சேரத்
தமிழோரா யிரத்திலமைத் திடுவோனே யெடுத்தபுகழ்ச்
சடகோபா திருக்குருகைப் பெருமாளே.

[குறிப்பு:— இது நம்மாழ்வார்விஷயமான காப்பு. பணி-பாம்பு; ஈண்டு ஆதிசேடனைக் குறித்தது. தனு-வில். திரு-இலக்குமி; அது இங்கு சீதாபிராட்டியைக் குறித்தது. திளைத்தல்-அனுபவித்தல். குரக்கரசு-குரங்கரசு-குரங்குக் கூட்டங்களுக்கு அரசனன வாலி. பொருசீராமனை-அம்பாலெய்துகொன்ற ஸ்ரீராமபிரானை. கடலைக்கடவா-கடலைக்கடந்து. களம்-போர்க்களம். பரிவு-அன்பு. சீதளம்-குளிர்ச்சி. பொருநை-தாமிரபர்ணிநதி. சிகரி-மலையுச்சி. உட்

[1] மணத்தவனை. [2] நீளரக்கர். [3] சீதளக்குமரித். [4] சிகாத்திடி. [5] பிறப்படவுட்.

*

பகை:— காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்சரியம் என்பன. தமிழோராயிரம்-ஆயிரம் பாசுரமுடையதாகச் செய்யப்பட்ட திருவாய் மொழி யென்னும் திவ்யப்ரபந்தம். குருகை-ஆழ்வார்திருநகரி. திருக்குருகைப் பெருமாள் என்றது இங்கு நம்மாழ்வாரை.]

2. பாரதிநெஞ் சாலுணர்ந்து மேல்வருமென் றேதெளிந்து
பாடியநன் காதைபண்டை மொழிவேதம்
பார்பகருந் தூயமந்த்ரம் நோய்முழுதுந் தீர்மருந்து
பாலமுதந் [1]தேனெதிர்ந்த வினையிர்வாள்
ஈரமில்வெம் பாறைநெஞ்சு நேருருகும் பாடலண்ட
ரீசனயன் பேணுமின்ப மறவாதோர்
யாதுநினைந் தாலுமந்த வாழ்வுதருந் த்யாகசிந்து
ராமசயம் பாடவந்து துணையாவாய்
வாரிகடந் தேகி வஞ்சி யாருயிர்பொன் றாதுகண்டு
மாநகரஞ் சூறை கொண்டு களமீதே
வானின்மருந் தேகொணர்ந்து வீரர்மயங் காவிதந்து
மாவிருதிண் டோள் விளங்க வமராடிச்
சோரன்மடிந் தேகவன்று தேவிபதஞ் சூடிநின்று
சோபனமுங் கூறிவந்து சுடுதீமுன்
சூழ்பரதன் காணமுந்தி யர்விபுரந் தேயுகந்த
தூதனெனும் பேர்புனைந்த பெருமாளே.

[குறிப்பு:— இது அநுமான்விஷயமான காப்பு. பாரதி-சரஸ்வதி. 'பாரதி ....காதை'என்றது ஸரஸ்வதியே வான்மீகரதுநாவில் வீற்றிருந்து இராம சரிதத்தைப் பாடினன் என்று பெரியோர் கூறியதைப் பின்பற்றிக் கூறிய வாறு. சிந்து-கடல். வஞ்சி-சீதாபிராட்டி. பொன்றுதல்-அழிதல். களம்-யுத்த ரங்கம். மருந்து-சஞ்சீவி. ஆவி-உயிர். சோரன்-இராவணன். இவ்விரண்டு பாட்டும் 'நாடியபொருள்கைகூடும்' என்னும் கம்பர்பாடலின் விரிவுரை போன்றிருத்தல் காண்க.]

---

[1] தேனெதிர்ந்து

3. கோழையா னவர்மிகுத்த வீரமே புகலுகிற்பர்
கோதுசே ரிழிகுலத்தர் குலமேன்மை

கூறியே நடுவிருப்பர் சோறிடார் தருமபுத்ர
கோவநா னெனவுரைப்பர் மிடியூடே

யாழுவார் நிதியுடைக் குபேரனா னெனவுரைப்பர்
ஆசுசேர் கலியுகத்து நெறியிதே

யாயுநா லடைவுகெட்ட நானும்வே றலவவர்க்கு
ளாகையா லவைபடக்க முறையேனோ

பேழைவா னவர்பிழைக்க ஆணைவா சவனடத்த
ஈழமேல் வெயிலெறிக்க மதிவேணி

ஈசனார் தனதிடுக்கண் மாறியே கயிலைவெற்பில்
ஏறியே யினிதிருக்க விருநாலு

வேழமா னவையினெற்றி நாலுகோ டுகண்முளைக்க
வேதவீ டணனொருத்தன் முடிசூட

வீரரா வணனுடற்குண் மூழ்கியே கழுகுகொத்த
வீறுசேர் சிலையெடுத்த பெருமாளே.

[குறிப்பு:—மிடி-தரித்திரம். ஆசு-குற்றம். ஆணை-ஆக்ஞை. வாசவன்-இந்திரன். ஈழம்-இலங்கை. மதி-பிறைச்சந்திரன். வேணி-சடை. இடுக்கண்-(கைலாயத்தைஇராவணன் தூக்கியசைத்தமையாலுண்டான) துன்பம். வெற்பு மலை. வேழம்-யானை. வீறு-பெருமை. முதலிரண்டுபாட்டும் வணக்கம், வருபொருளுரைத்தல், பய னென்றவற்றைக் கூறலானும், இப்பாடல் அவையடக்கங் கூறலானும் தற்சிறப்புப்பாயிரமாயினவாறு காண்க.]

நூல்.

பாலகாண்டம்.

4. உலக மொருமூன்று மொண்பெற்ற தத்துவமும்
அகர முதல்சான்ற வைம்பத்தொ ரக்கரமு
முரிய மறைநான்கு மந்தத்து நற்பொருளு முயிர்யாவும்
உருவு நடைவாய்ந்து மண்பற்றி நிற்பனவும்
அகமு மகமேய்ந்த வண்டத்தி னிற்புறமும்
ஒளியி லொளிபோன்ற இன்பத்தி னிற்சுடரு மறிவாகி
யிலகு மொருபூர்ண மென்றுற்ற மெய்ச்சொருப
நிலையை வெளிகாண்ட லும்பெற் றிருட்பகலும்
இலதொர் நெறிபூண்ட நின்பற்ப பொற்சரண மகலாதே
யிறுதி யறவாழ்ந்து நண்பர்க்கு ளொத்துருகி
யடிமை மலபாண்ட தொந்தத்தை விட்டொழிய
விதய விருள்வாங்கி யென்றுன் க்ருபைக்கணருள் [1]தருவாயோ
மலரு மலரேந்தி யண்டத்து நக்கனயன்
அமரர் கிளைசூழ்ந்து வந்திக்க [2]நற்கமலை
மருமமிசையோங்க வந்தக் கடற்றிடரின் முகில்போலே
வடிவி னெழிரேன்ற முந்திக் கவுத்துவமும்
இனிய ப்ரபைகான்று விஞ்சத் திருத்துளவ
மருவ வொருகாந்தை நண்புற் றிடப்பெரிய கரமீதே
நிலவு தருகாந்தி சங்கத்தி னிற்பிறழ
வெயிலை யழகார்ந்த செஞ்சக்ர முற்றுமிழ
நிகரில் கதைசார்ங்க முங்கட்க மெய்ப்படையு முடன்வாழ
நிரைகொ ளுலகீன்ற வுந்தித் திருக்கமலம்
மலர வடிசேர்ந்து கங்கைத் திருப்பொலிய
நெடிய தொருபாம்பி னின்பத் திருக்கண்வளர் பெருமாளே.

---

[1] புரிவாயோ. [2] நக்கமலை.

[குறிப்பு:—"அகரமுதல்சான்ற ஐம்பத்தொரக்கரமும்" என்றது வடமொழி முதலெழுத்துக்களை. பற்பம்-தாமரைமலர். சரணம்-திருவடி. நக்கன்-சிவன். அயன்-பிரமன். அமரர்-தேவர்கள். கமலை-இலக்குமி. மருமம்-மார்பு. முகில்-மேகம். வடிவம்-சொரூபம். எழில்-அழகு. ப்ரபை-ஒளி. கான்று-கக்கி. விஞ்ச-மேம்பட. மருவ-பொருந்த. காந்தை-நாயகி, இங்கு பூமிப்பிராட்டியைக்குறித்தது. கரம்-கை. நிரை-வரிசை. உந்தி-கொப்பூழ்.]

5. கொழுந்தசை நிணத்துட னெலும்பு
நரம்புகுடர் சுக்கில மலங்கள்
குறும்புன விரத்தமொ டமைந்து முடைநாறுங்

குரம்பையை நமக்குநிலை யென்று
தனம்பல குவித்துநிறை பெண்கள்
கொடுங்கையி லணைக்கமகிழ் சிந்தை யொருகாலம்

உழுந்துருள் கணப்பொழுது நின்று
தரங்கமற வுட்பகை களைந்து
னுடன்படு மெனிற்புவி யடங்க வரசாளும்

ஒடுங்கவில் சிறப்பினிது தந்து
பெரும்பத மளித்திடுவை யென்ப
துணர்ந்துமுணர் வற்றுநர கின்கண் விழுவேனோ

செழுந்தருண பற்பபதி நஞ்ச
மருந்திய தனிக்கடவு ளண்டர்
திருந்துகுலி சத்தனொ டடங்க வணைவோருஞ்

செறிந்திடு மரக்கர்பொர நொந்து
நெடுங்கனக வெற்பின்மிசை வந்து
தெளிந்து கமலப்பத நினைந்து க்ருபையாளர்

வழிந்தன மிளைத்தனம னங்கொ
டிரங்குனத டைக்கல முகுந்த
வனந்தலையி னித்தவிர்க வென்று துதிபோதின்

அடைந்திடு திருத்துயி லொழிந்து
நெடுங்கட லிடைப்ரபைசி றந்த
அநந்தசய னத்தினிலெ ழுந்த பெருமாளே.

[குறிப்பு:—குரம்பை-கூடு. பற்பபதி-பிரமன். நஞ்சம் அருந்திய தனிக் கடவுள்-சிவன். அண்டர்-தேவர். குலிசத்தன்-வச்சிராயுதத்தையுடைய இந்திரன். கனகவெற்பு-மஹாமேரு. கமலப்பதம்-தாமரைமலர்போலும்திருவடி. அனந்தல்-நித்திரை.]

6. மடுவிலே கரிக்குமுந்து வந்து
நெடியதூ ணிணைப்பிளந்து நின்று
மருவுபா ரனைத்துமண்ட ரண்ட — வுகையாகும்

மதுரவாய் மடுத்தடங்க வுண்டு
1பெரியநாபி யிற்பரிந்து தந்து
வருசரா சரத்துளும் புறம்பு — மகலாநீ

அடியனே னினைக்கவுங் குணங்கள்
பரவியே துதிக்கவுந்தெளிந்துன்
அடிதொழா வழைக்கவும் பரந்து — திரியாதே

அறிவிலே செலுத்தவுங் கலந்தெ
னளவுபோ லவொத்துநின்ற தஞ்ச
மதனையா னுரைத்திடுந் தரங்க — ளெனலாமோ

நெடியவேலை விட்டெழுந்து சங்கு
திகிரிபாணி யிற்றுலங்க வெங்கு
நிகரிலாத பற்பமங்கை துங்க — மணிமார்பா

நிறையவே நிறத்த கொண்டன் மண்டி
வருவபோ லெழுச்சிகொண்டு நுங்கள்
நினைவையார் முடிப்பமென் றெழுந்த — வெழில்காணுக்

கடவுளே க்ருபைத்தடங்க ணெங்கள்
இறைவனே 2யிரக்ஷியென்று வந்து
கனகமேரு வுச்சியின்க ணின்று — சிவனுடக்

கமலயோனி பொற்கணம்பு சிந்த
வமரர்பூ விறைத்திறைஞ்ச வன்று
கருடவா கனத்தில்வந் திழிந்த — பெருமாளே.

---

1 நெடியநாபி. 2 யிரக்ஷியென்றெழுந்து.

[குறிப்பு:—கரி-கஜேந்திரன். மதுரம்-இனிமை. வாய்மடுத்து-வாயிற் [illegible]த்து. அடங்க-முழுவதும். எர்பி-கொப்பூழ். பரிந்து-விரும்பி. வேலை-கடல். நேமி-சக்கரம். பாணி-கை. துங்கம்-உயர்வு. மண்டி-நெருங்கி. கொண்டல்-மேகம். கமலயோனி-பிரமன். அமரர்-தேவர். இறைஞ்ச-வணங்க.]

7. அகப்பொருண் மார்க்க முணர்ந்து
புறப்பொருள் போக்கி மதங்கள்
அடுத்ததொல் காப்பிய பஞ்ச — வதிகாரம்

அனைத்திலு நாக்க எழுந்தி
வழுத்திடு நாற்கவி யின்சொ
லழுக்கறு பாட்டுட னின்று — புலவோருன்

மகத்துவ மேத்தின ரந்த
நெறித்தமிழ் கேட்டு மியன்ற
வழக்க மிலாக்கவி கொண்டு — தமியேனும்

வழுத்துகை தோத்திர மென்று
பொறுத்தரு ணிக்குத வின்றி
மகப்பெறு வார்க்கவர் புன்சொ — லிதமாமே

மிகுத்த விராக்கதர் தங்கள்
கனத்த பராக்ரம மின்று
விரித்திட லார்க்கு வசந்தண் — மதிபானு

வெளிப்படு காட்சி யொழிந்து
மகத்திறை யாக்ஞை குலைந்து
மிடித்தது நூற்றுறை யெங்கு — நெறிகோடிச்

செகத்திறை மாட்சி குலைந்த
தெமக்கினி மூச்சிலை யெங்கள்
சிறைத்தலை மீட்டரு ளென்று — முடிதாழ்ச்

சிறப்புறு நாற்றலை மைந்த
னுரைத்திடும் வார்த்தைக ளன்று
திருச்செவி சாத்தி யிருந்த — பெருமாளே.

[குறிப்பு:—மதங்கள்-பிறர்மதம் உடன்படல் முதலிய எழும். பஞ்சஅதிகாரம்-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐந்ததிகாரங்கள்.

நாற்கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பனவாம்; வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பனவு மாம். வழுத்துகை-சொல்லுதல். மதி-சந்திரன். பானு-சூரியன். மகத்திறை-யாகபதி-விஷ்ணு. கோடி-வளைந்து. செகத்து-பூமியின்கண். இறைமாட்சி-அரசின்சிறப்பு. தாழா-தாழ்த்து. நாற்றலை மைந்தன்-பிரமன். செவிசாத்தல்-கேட்டல்.]

8. முனை யழிந்தது பூர்த்தி குலைந்தது
வயது சென்றது வாய்ப்பல் விழுந்தது
முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்தது ப்ரபைதானும்

முக மிழந்தது நோக்க மிருண்டது
விருமல் வந்தது தூக்க மிகுந்தது
மொழி தளர்ந்தது நாக்குழ றுங்கொடு மறிவேபோய்

நினை வயர்ந்தது நீட்டன் முடங்கலு
மவச மும்பல வேக்கமு முந்தின
நெறி மயங்கின மூப்பு முதிர்ந்தது பலநோயும்

நிறைய நின்றது பாய்க்கிடை கொண்டது
சல மலங்கழி னூற்ற மெழுந்தது
நிமிட மிங்கினி யாச்செனு மன்றுமுன் வருவாயே

இனி யெழுந்திரு மாத்திர எண்டர்கள்
கவியு மெண்குமெ னுச்சொரு பங்கொளு
மினிய குன்றெடு காட்டி லடைந்திடு நிரையார்தோள்

இருபதும் ப்ரபை காட்டு நெடுந்தலை
யொருப துந்துக ளாக்கி வணங்கல
ரெவரை யுந்தனி யாக்கை யிடும்படி யினிமேல்[1]யான்

மனுவரம்பது காத்து நிறம்பெறு
திகிரி சங்கமு மாற்ற லநந்தனு
மருவு தம்பிய ராய்த்தொழ நந்தய ரதனார்தம்

மதலை யென்று[2]ந லேற்ற மிகுந்துள
மனித னென்று மயோத்தி யிடந்தனில்
[3] வருவ னென்றொரு வார்த்தை வழங்கிய பெருமாளே.

[குறிப்பு:—சிலை-வில். ப்ரபை-ஒளி. நோக்கம்-கண். கவி-குரங்கு. எண்கு-கரடி-குரங்கினுள் ஒருவகை. குன்று-மலை. வணங்கலர்-சத்ருக்கள். திகிரி-சக்கரம். அநந்தன்-ஆதிசேடன். மதலை-புதல்வன்.]

---

[1]. யாம். [2]. நமேற்றமறந்துள. [3]. வருவமென்